ICCM-2016

# PROCEEDINGS

# 3rd International Conference on Contemporary Management

**"Critical Solutions for Contemporary Issues"**

Faculty of Management Studies and Commerce
University of Jaffna, Sri Lanka
28th & 29th July, 2016

# ORGANIZING COMMITTEE

**Chair** : **Prof. T. Velnampy**
Dean,
Faculty of Management Studies and Commerce

:
**Co- Chairs** **Prof. K. Theverajah**
Head, Department of Commerce
**Mr. E. Ratnam**
Head, Department of Marketing
**Ms. S.M.C. Mahenthiran Aloysious**
Head, Department of Human Resource Management
**Dr.(Ms.)R. Yogendrarajah**
Head, Department of Financial Management
**Prof. B. Nimalathasan**
Head, Department of Accounting

**Convener** : **Dr. S. Rajumesh**
Senior Lecturer
Department of Marketing

**Secretary** : **Ms. J. Thevananth**
Senior Lecturer
Department of Financial Management

**Action Committee** :

Prof. T. Velnampy
Ms. T. Sivaskaran
Ms. P. Muraleetharan
Ms. J. Thevananth
Dr. S. Rajumesh
Mr. R. Kajananthan

**Editorial Committee** :

Dr. (Ms). R. Yogenthirarajah
Dr. S. Ramesh
Dr. N. Kengatharan
Dr. (Ms). S. Shanmugathas
Dr. P. Pratheepkanth
Mr. S. Achchuthan

Proceeding of International Conference on Contemporary Management - 2016 (ICCM-2016), pp 107-115

# போருக்கு பிந்திய வடமாகாணச்சூழலில் சிறுவர் பராமரிப்பு இல்லங்களின் வகிபங்கு

## (கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டது)

தர்ஷிகா.பா[1]., ஞானகுமாரன்.நா[2]


### ஆய்வுச்சுருக்கம்

இவ் ஆய்வானது போருக்குப் பிந்திய வடமாகாணச் சூழலில் சிறுவர் பராமரிப்பு இல்லங்களின் வகிபங்கினை எடுத்துக்காட்டுவதோடு அங்கு சிறுவர்கள் எதிர்கொள்ளும் உடல், உள, சமூக ரீதியான பிரச்சினைகளையும் அதற்கான காரணங்களையும் அப் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கான தீர்வுகளையும் முன்மொழிவதாகவும் அமைகிறது. போருக்கு பிந்திய வடமாகாணச் சூழலில் முன்னைய காலங்களைவிட இன்று சிறுவர் இல்லங்களின் தேவைப்பாடும் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. போருக்குப் பிற்பட்ட சூழலில் அநாதைகள் ஆக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதோடு அச் சிறுவர்கள் உடல், உள, சமூக ரீதியாக பல்வேறுபட்ட இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழல் காணப்படுகிறது. இவ்வாறான சிறுவர்களுள் சிலர் சிறுவர் பராமரிப்பு இல்லங்களினுள் சேர்த்து கொள்ளப்படுவதோடு அங்கு தமது அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கெள்வதோடு அங்கு அவர்கள் தமது எதிர்காலம் நோக்கிய இலட்சிய வாழ்விற்கு ஓர் திட்டமிடப்பட்ட ஒழுங்கு முறையில் வழிப்படுத்தப்படுகின்றனர். இவ் ஆய்விற்காக இலங்கையின், வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் அமைந்துள்ள 7 சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் தெரிவு செய்யப்பட்டு அங்கு வாழும் 787 சிறுவர்களுள் 100 பேர் எழுமாற்று மாதிரித் தெரிவின் மூலம் ஆய்விற்காக உள்வாங்கப்படுகின்றனர். இங்கு ஆய்வு முறையியல்களாக பகுப்பாய்வு முறையியல், விபரண முறையியல், வரலாற்று முறையியல் என்பன பயன்படுத்தப்படுகின்றன. இவ் ஆய்வில் முதன்நிலைத்தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் மூலம் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. இங்கு அளவுசார், பண்புசார் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அளவுசார் நுட்பத்தில், வினாக்கொத்து ரீதியாக தரவுகள் சேகரிக்கப்பட்டு புள்ளிவிபரவியல் ரீதியாக பகுப்பாய்வு செய்யப்படுகிறது. பண்புசார் நுட்பத்தில் விடய ஆய்வு, நேர்காணல், பிரதான தகவல் வழங்குனருடாக தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. ஆய்வு முடிவாக, இங்கு வாழும் சிறுவரக்ளுக்கு அடிப்படைத் தேவைகள், கற்றலுக்கான வசதி வாய்ப்புக்கள் போன்ற பௌதீக ரீதியான தேவைகளை இப் பராமரிப்பு இல்லங்கள் சிறப்பாக அமைத்துக் கொடுத்த போதிலும் உளவியல் ரீதியான திருப்தி நிலைகள் 55% இற்கு குறைவாக காணப்படுகின்றன. இவ் வகையில் சிறுவர் பராமரிப்புஇல்ல நிர்வாகக் கட்டமைப்புக்குள் உளவளத்துணைப்பகுதியை இணைத்துக் கொள்வதுடன் அதனூடாக பல்வேறான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதாகவும் இவ் ஆய்வின் பரிந்துரைகள் அமைகின்றன.


**திறவுச்சொற்கள்:** வடமாகாணச் சூழல், சிறுவர்கள், சிறுவர் பராமரிப்பு இல்லம், உளவளத்துணை

---

[1]மெய்யியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், tharsigapackijanathan@gmail.com
[2]கலைப்பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

## 1. அறிமுகம்

போருக்கு பிந்திய வடமாகாணச் சூழலில் முன்னைய காலங்களைவிட இன்று சிறுவர் இல்லங்களின் தேவைப்பாடும் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது எனலாம். 1989ல் ஐக்கிய நாடுகள் சபையால் சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் பிரகாரம் 18 வயதிற்கு உட்பட்டவர்கள் சிறுவர்கள் என்ற பகுப்பினுள் உள்வாங்கப்படுகின்றனர். இந்த வகையில் பெற்றோர்களில் ஒருவரையோ அல்லது இருவரையும் இழந்த சிறுவர்களும் ஏனைய உறவினர்களுடன் தங்கி வாழ முடியாத நிலையில் காணப்படும் சிறுவர்களும் மிகநலிந்த பொருளாதாரத்தைக் கொண்ட குடும்பத்தில் பெற்றோர்கள் இருந்தும் குடும்பத்துடன் வாழமுடியாத நிலையில் உள்ள சிறுவர்களும் மற்றும் பிறந்த நேரத்தில் இருந்து பெற்றோர்கள் யார் எனத் தெரியாத சிறுவர்களும் மாகாண ஆணையாளர் மற்றும் நீதிமன்றத்தின் உத்தரவுடன் சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் அனுமதிக்கப்படுகின்றனர்.

உலகளாவிய ரீதியில் சிறுவர் பராமரிப்பு இல்லங்களிற்கு சிறுவர் சேர்க்கப்படுவதற்கான வயதெல்லை குறித்து நோக்கின் 8- 14 வயதிற்கு இடைப்பட்ட சிறுவர்களே அதிகமாக சேர்க்கப்படுகிறார்கள் இலங்கையில் 42,768 சிறுவர்கள் , பராமரிப்பு இல்லங்களில் வாழுகின்றார்கள் என 2013 ம் ஆண்டு தெற்காசிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இன்று குறிப்பாக வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் போரினாலோ, சுனாமி போன்ற இயற்கைஅனர்த்தினாலோ அல்லது வேறுசில காரணங்களாலோ அநாதைகள் ஆக்கப்பட்ட சிறுவர்கள் உடல், உள, சமூக ரீதியாக பல்வேறுபட்ட இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழல் காணப்படுகின்றன. இவ்வாறான பாதிப்புக்கள் இச் சிறுவர்களின் எதிர்கால வாழ்வினை குறிப்பாக அடிப்படை உரிமையான கல்வியினைக் கூட பெற்றுக்கொள்வதில் பெரும் சவாலினை ஏற்படுத்தப்படுகின்றன.

அதாவது பெற்றோரில் ஒருவரையோ அல்லது இருவரையும் இழந்த சிறுவர்கள் இன்னொருவரில் தங்கி நிற்கின்ற போது அவர்களது அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொள்வதிலும் மற்றும் பல்வேறு விதமான உடல், உள ரீதியான துஷ்பிர யோகங்களிற்கும் உட்படுகின்றனர். தவறானவர்களுடனான பழக்கங்களினால் களவு, போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாதல், திருமணத்திற்கு முன்னராக கர்ப்பமாதல் போன்ற பல தீய பழக்கவழக்கங்களுக்கும் ஆளாகின்றனர். அத்துடன் பலவந்த தொழில் நடவடிக்கை, கட்டாய இராணுவ நடவடிக்கை, மருத்தவப் பாராமரிப்பு புறக்கணிப்பு போன்றவற்றிற்கும் உள்ளாகின்றனர்.

இவ்வாறாக எதிர்கால வாழ்வினைக் கேள்விக் குறியாக்கும் நிலையில் உள்ள பல சிறுவர்களுள் சிலர் சிறுவர் பராமரிப்பு இல்லங்களினுள் சேர்த்து கொள்ளப்படுகின்றனர். இவ்வாறு சிறுவர் பராமரிப்பு இல்லங்களினால் உள்வாங்கப்படும் சிறுவர்கள் தமது அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொள்வதோடு எதிர்காலம் நோக்கிய இலட்சிய வாழ்விற்கு ஓர் திட்டமிடப்பட்ட ஒழுங்கு முறையின் ஊடாக ஓரளவுக்கேனும் வழிகாட்டப்படுகிறார்கள்.

இந்த வகையில் சிறுவர் பராமரிப்பு இல்லங்களின் வகிபங்கு பற்றியும் மேலும் அங்கு சிறுவர்கள் எதிர்நோக்கும் சவால்களை ஆராய்வதுடன் சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் மேலும் தமது பங்களிப்பினை

மேம்படுத்தும் வகையில் சில தீர்வுகளை யும் பரிந்துரைகளையும் முன்மொழிவதாகவும் இவ் ஆய்வு அமைகிறது.

**2. ஆய்வின் நோக்கம்**

- போருக்குப் பிந்திய தற்காலச் சூழலில் சிறுவர் இல்லங்களின் முக்கியத்து வத்தினை எடுத்துக்காட்டல்.
- சிறுவர்கள் எதிர்கொள்ளும் உடல், உள, சமூக ரீதியான பிரச்சினைகளை எடுத்துக்காட்டல்
- சிறுவர்கள் மேற்குறிப்பிட்ட பிரச் சினைகளை எதிர் கொள்வதற்கான காரணங்களைக் கண்டறிதல்.
- சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சி னைகளில் இருந்து விடுபடுவதற்கான தீர்வு களை முன்மொழிதல்

**3. ஆய்வின் முக்கியத்துவம்**

போருக்குப் பிந்திய தற்காலச் சூழலில் சிறுவர் இல்லங்களின் வகிபங்கினை எடுத்துக்காட்டுவதாக இவ் ஆய்வானது அமைகிறது.

இன்றைய வடக்குமாகாணத்தைப் பொறுத்த வரையில் குறிப்பாக போருக்குப் பிற்பட்ட சூழலில் இச் சிறுவர் தொடர்பான பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது இந்தவகையில் சிறுவர்கள் எதிர்நோக்கும் சவால்களை தெரிவு செய்யப் பட்ட சில சிறுவர் இல்லங்களை மையப்படுத் திய இவ் ஆய்வின் மூலம் வெளிஉலகிற்கு கொண்டுவருவதன் மூலம் இலங்கையில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான பிரச்சி னையை வெளிக்கொண்டு வருவதுடன் அச் சிறுவர்களின் எதிர்கால மேம்பாட்டிற்கும் உதவுவதோடு இனிவரும் காலங்களில் இப்பிரச்சினைகளை குறைப்பதற்கும் இவ்ஆய் வானது அவசியமானதாக அமைகிறது எனலாம்.

**4. இலக்கிய மீளாய்வு**

Nirekha De silva and Asith.G(2011) என்பவர்களால் எழுதப்பட்ட *"Push and Pull factors of Institutionalization A study in the Eastern Province of Sri Lanka"* என்ற ஆய்வானது சிறுவர்கள் தொடர்பான பாது காப்புப்பற்றியும் சிறுவர் பராமரிப்பு இல்லங் களை குறிப்பாக இலங்கை கிழக்கு மாகா ணத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ் ஆய்வானது சிறுவர் இல்லங்களில் காணப்படும் சிறுவர்களது நிலை தொடர் பாகவும் சிறுவர் பராமரிப்பு இல்லங்கள், இச்சிறுவர்களது எதிர்கால வாழ்விற்கான ஊக்கத்தினையும் அடிப்படைகளையும் எவ்வகையில் வழங்குகின்றன என்பது பற்றி ஆராய்கிறது.

Children's Rights in Institutional care in Sri Lanka (2005) வெளியிடப்பட்ட *"Home truths"* என்ற ஆய்வில் சிறுவர் பராமரிப்பு இல்லங்களின் நிலமைகள் பற்றியும் இலங்கையில் சிறுவர் பாராமரிப்பு இல்லங் களில் பராமரிக்கப்படும் சிறுவர்களது உரிமைகள் பற்றியும் இங்கு ஆராயப் படுகின்றது. பிள்ளைகள், சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் சேர்க்கப்படுவதற்கான கார ணங்கள் பற்றியும் இந்நிலமைகளில் இருந்து விடுபட சேவையாற்றும் பல்வேறு நிறுவனங் கள் தொடர்பான முயற்சி பற்றியும் பராமரிப்பு இல்லங்களின் தரம் பற்றியும் இல்லங்கள் தொடர்பாக சிறுவர் பராமரிப்பின் நிலைப்பாடு பற்றியும், நிறுவனப்பராமரிப்புத் தொடர்பான கொள்கைச் சட்டகம் பற்றியும்

இங்கு கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

Institutionalized Children Explo rations and Beyond(2014) என்ற நூலில் Varathgowry vasudevan என்பவரால் எழுதப் பட்ட "*Child care Institutions as Quality Family, Surrogate (Alternative) Care services in Sri Lanka*" என்ற கட்டுரையில் சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் காணப்படும் சிறுவர்கள் வீடு செல்வதற்கு சந்தர்பம் காணப்படுமேயானால் அதனை "day care center" ஆக மாற்றுவதோடு அங்கு சிறுவர்களது குடும்ப உறுப்பினர்களை வேலைக்காக அங்கீகரிக் கப்படுவதன் ஊடாக சிறுவர்களிற்கும் பெற்றோர்களிற்கும் இடையிலான உறவை வலுப்படுத்தலாம் என்றும் இது இலங்கைக்குப் பொருத்தமானது என்றும் கூறியுள்ளார்.

இதே நூலில் Thatparan. J என்பவரால் எழுதப்பட்ட "*Improving National care standards in south Asia*" என்ற கட்டுரையில் சிறுவர் பராமரிப்பு இல்லங்களின்தராதரம் தேசிய மட்ட ரீதியில் எவ்வாறு உள்ளது என்றும் இலங்கையின் தராதரத்தை தேசிய மட்டத்திற்கு எவ்வாறு உயர்தலாம் என்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் சிறுவர் பராமரிப்பு இல்லங்களின் தராதரம் சிறப்பாக காணப்படுகிறது என்றும் குறிப்பிடடுள்ளார்.

National Child protection Authority (2013) வெளியிடப்பட்ட "*Guidelines and Standards for Child care Institutions is Sri Lanka*" என்ற நூலில் சிறுவர் பராமரிப்பு இல்லங்களின் தராதரங்கள் எவ்வாறு காணப்பட வேண்டும் என்று பல்வேறான நிபந்தனைகளையும் அளவு கோள்களையும் முன்மொழிந்துள்ளது.

UNICEF நிறுவனத்தினால் வெளியிடப் பட்ட சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் எனும் நூலானது சிறுவர் நேயக் கொள்கை கள், உரிமைகள், சிறுவர்களைச் சுரண்டிப் பிழைத்தலுக்கான முடிவுகட்டும் செயற்பாடு கள் என பல கோணங்களில் சிறுவர்களது பாதுகாப்புத் தொடர்பாக பல்வேறு கட்டுரைகளை எழுதியுள்ளது.

சேராவிமலதர்ம, அமரசிறி.டி.சில்வா, நிலக்ஷி.டி.சில்வா (2007) போரின் தாக்கத் துடன் வளர்ச்சி - இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் ஆயுத மோதல்களால் பாதிக் கப்பட்ட சிறுவர்களது அனுபவங்கள் என்ற நூலில் போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பற்றிய நிலைகள் விரிவாக ஆராயப் படுகின்றன.

நீலகண்டன்.வே பிள்ளைகளுக்கு உதவு வோம் என்ற நூலில் சிறுவர்களது நல்வாழ்க் கைக்கான வளர்ச்சியையும் அபிவிருத் தியையும் உயர்மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான முக்கிய காரணிகள் பற்றியும் சாதகமான சுகநல அபிவிருத்திக்கான தடை கள் பற்றியும் சமூகமான வாழ்க்கை முறை யை சிறுவர்களுக்கு எவ்வாறு அமைத்துக் கொடுப்பது என்பது பற்றியும் ஆராய்கின்றது.

UNICEF (2005) வெளியிடப்பட்ட ஒதுக்கப்பட்டும் பார்வைக்குப் புலப்படாது முள்ள சிறுவர்கள் - உலகச்சிறுவர்களின் நிலை 2006 எனும் நூலில் சிறுவர்களுக் கான எமது கடப்பாடுகள் பற்றியும் பார்வைக் குப் புலப்படாத சிறுவர்களது நிலைபற்றியும் வளந்தோரின் பங்கை சிறுவர்கள் முதிர்ச்சி அடைய முன்பு வகிப்பது பற்றியும் ஆராயப் பட்டுள்ளது.

கரோல் பெல்லமி (2007) என்பவரால் வெளியிடப்பட்ட அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் பிள்ளைப்பருவம் - உலகச் சிறுவர் நிலை- 2005, என்ற நூலில் பிள்ளைப்பருவம் பற்றிய வரையறையும் சிறுவர் உரிமைகள் பற்றியும் வறுமையில் வாழும் சிறுவர்களது நிலை பற்றியும் ஆரயப்பட்டுள்ளது.

குணரத்தினம். வே, விக்கினேஸ்வரன்.கு (2007) மனித உரிமைகள்- கோட்பாடுகளும் வியாபகமும் எனும் நூலில் 5வது அத்தியாயத்தில் சிறுவர் உரிமைகளும் சவால்களும் பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இங்கு சிறுவர் உரிமைகள் தொடர்பான உறுப்புரைகள் முன்வைக்கப்பட்டு சிறுவர் உரிமைகள் தெளிவு படுத்தப்பட்டதுடன் அதன் நடைமுறைத் தன்மை பற்றியும் ஆராயப் பட்டுள்ளன.

**5. ஆய்வின் வரையறை**

சிறுவர் பராமரிப்பு இல்லங்களைப் பொறுத்தவரையில் இவை அரசசார்பாகவும், அரச சார்பற்றதாகவும் இரண்டு வகைப்படும் அரசசார்பான இல்லங்களாக, சிறுவர் தடுப்பு நிலயங்கள், சிறுவர் சீர்திருத்தப்பள்ளி போன்றன காணப்படுகின்றன. இங்கு சட்டத்தின் அடிப்படையில் சில குற்றங்களுக்காக சிறுவர்கள் பராமரிக்கப்படுகின்றனர். எனது ஆய்வில் இச் சிறுவர் இல்லங்களில் காணப்படும் சிறுவர்கள் ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை.

அரசசார்பற்ற நிறுவனங்களில் பராமரிக்கப்படும் சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் வாழும் சிறுவர்கள் பற்றியே எனது ஆய்வு கவனம் எடுக்கிறது. அத்துடன் வடமாகாணத்தில் குறிப்பாக மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சில தெரிவு செய்யப்பட்ட இல்லங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. இங்கு குறிப்பிட்ட இல்லங்களில் காணப்படும் 3 -18 வயது உடைய இரு பாலினச் சிறுவர்களும் ஆய்விற்கு உட்படுத்தப்படுகின்றனர்.

**6. தரவு சேகரிப்பு**

இவ் ஆய்வானது முதன் நிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நகர்த்தப் படுகிறது. முதன் நிலைத்தரவுகளானவை அவதானம், நேர்காணல், வினாக்கொத்து முறை என்பவற்றின் மூலமும் மற்றும் சிறுவர் விவகார நன்நடத்தை உத்தியோகத்தர்கள், சிறுவர் இல்லப்பொறுப் பாளார்கள், ஊழியர்கள், சிறுவர் இல்லச் சிறார்கள் என்பவர்களுடான நேரடியான சந்திப்பினை ஏற்படுத்தி தகவல்கள் பெறப்படுகின்றன. இவ் ஆய்வில் இரண்டாம் நிலைத்தரவுகளும் பெறப்படுகின்றன. அதாவது குறிப்பிட்ட சிறுவர் இல்லங்களால் வெளியிடப்பட்ட ஆண்டு மலர்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், இணையத்தள தகவல்கள், பத்திரிகைச் செய்திகள் மற்றும் ஏனையோரால் இவ் சிறுவர் இல்லங்கள் பற்றி வெளியிடப்பட்ட ஆய்வுகள் என்பவற்றின் மூலம் தகவல்கள் பெறப்படுகின்றன.

**7. மாதிரி தெரிவு**

இங்கு 7 சிறுவர் பராமரிப்பு இல்லங்களிலும் காணப்படும் 787 சிறுவர்களில் எழுமாற்றான மாதிரித் தெரிவின் மூலம் 100 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன.

**8. ஆய்வு முறையியல்**

இங்கு ஆய்வு முறையியல்களாக பகுப்பாய்வு முறையியல், விபரண

முறையியல், வரலாற்று முறையியல் என்பன பயன்படுத்தப்படு கின்றன. இவ் ஆய்வானது அளவுசார், பண்புசார் நுட்பங்களைப் பயன்படுத்துகிறது எனலாம். இங்கு அளவுசார் நுட்பத்தில், வினாக்கொத்து ரீதியாக தரவுகள் சேகரிக்கப்பட்டு புள்ளிவிபரவியல் ரீதியாக பகுப்பாய்வு செய்யப்படுகிறது. பண்புசார் நுட்பத்தில் விடய ஆய்வு, நேர்காணல், பிரதான தகவல் வழங்குனரூடாக தகவல் பெறல் போன்றன காணப்படுகிறது

**9. ஆய்வின் கருதுகோள்.**

❖ சிறுவர் இல்லங்கள் போதியளவு அடிப்படை உரிமைகளை சிறுவர் களுக்குப் பெற்றுக் கொடுக்கின்றன.

❖ சிறுவர்கள் உளவியல் ரீதியான திருப்திநிலையை சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் பெற்றுக்கொள்கின்றனர்.


❖ சிறுவர்கள் பௌதீக ரீதியான திருப்திநிலையை சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் பெற்றுக்கொள்கின்றனர்.

**10. தரவுப்பகுப்பாய்வு.**

சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் வாழும் சிறுவர்கள், பராமரிப்பு இல்லங்களிற்கு வருகை தந்தமைக்கான காரணங்கள் தொடர் பான விபரம்.

இங்கு சிறுவர் பராமரிப்பு இல்லங் களிற்கு சிறுவர்கள் வருகை தந்தமைக்கான காரணங்களில் 45% வறுமையும் 11% பெற்றோர் இன்மையும் 8% பாதுகாப் பின்மையும் 23% கல்விகற்பதற்கும் 8% பராமரிப்பிற்காகவும் 2% போக்குவரத்து வசதியைப் பெறுவதற்காகவும் 3% தாய் அல்லது தந்தை மறுமணம் என்பன காரணங் களாக காணப்படுகின்றன.

சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் வாழும் சிறுவர்களது பெற்றோர்களின் நிலை பற்றிய விபரம்.




களஆய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் சிறுவர் பராமரிப்பு இல்லத்தின் இடம், சூழல் குறித்த தராதரத்தினை நோக்கும் போது 69% இற்கு மேலானவர்கள் பூரண திருப்தி மட்டத்தினை தெரிவித்துள்ளனர்

இங்கு வயதிற்கு தக்கவாறு உணவு மற்றும் அதன் தராதரமும் 92% மேலாக காணப்படுவதோடு தட்டுப்பாடு இல்லாத

| பெற்றோர்களின் நிலை | எண்ணிக்கை |
|---|---|
| தந்தை உள்ளவர்கள் | 49 |
| தந்தை இல்லாதவர்கள் | 51 |
| தாய் உள்ளவர்கள் | 74 |
| தாய் இல்லாதவர்கள் | 26 |
| தந்தை, தாய் இல்லாதவர்கள் | 19 |

வகையில் தினமும் உணவு வழங்கப்படுதல் 100% ஆகவும் களஞ்சியப்படுத்தப்படுதல் 99% ஆகவும் காணப்படுகிறது

சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் வழங்கப்படும் சிறார்களுக்கான உடைகளும் பிற துணித்தேவைகளும் பற்றிய கள ஆய்வின் முடிவுகளினை நோக்கும் போது 91% இற்கு மேற்பட்ட உடைகளும் பிற துணித்தேவைகளும் சிறுவர் பராமரிப்பு இல்லங்களினாலேயே வழங்கப்படுகின்றன.

இல்லத்தினுள்ளேயே பாடசாலைக்குச் செல்லாத நேரங்களில் கற்றலில் ஏற்படும் சந்தேகங்களைச் தீர்ப்பதற்கான போதனாசிரியர் வசதிகள் கிடைக்கப் பெறுவதானது 87% ஆகவும் பிற மொழியில் வாண்மை பெற வசதிகளானவை 86% ஆகவும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இங்கு சிறுவர் இல்லத்தில் காணப்படும் சிறுவர்களது உடல் நலம் தொடர்பான மருத்துவக் கவனிப்பானது 98% ஆகக் காணப்படுகிறது.

இங்கு உளவள உதவிகள் தேவைப் படும் மாணவர்கள் தங்களுடைய மனக்குறைவை நிர்வாகத்திற்கு அறியத்தரும் போது அவர்கள் அதற்காக ஆற்றுப்படுத் தலை உரிய காலத்தில் வழங்கப்படும் வசதிகளானவை 53% ஆகவும் ஆற்றுப் படுத்தலுக்கான உளவளத்துணையாளர் வசதிகளானவை 55% ஆகவும் காணப்படு கின்றன. இருப்பினும் உளவளத்துணையாளர் சந்திப்பானது குறிப்பிட்ட காலப்பகுதிகளில் மட்டும் நிகழ்த்தப்படுகின்றன.

**சிறுவர்கள் எதிர்நோக்கும் சவால்கள்**

சிறுவர் பராமரிப்பு இல்லங்களுக்குள் சில சிறுவர்கள், பராமரிப்பு இல்லப் பெறுப்பாளர்கள், ஊழியர்கள் மற்றும் ஏனைய சிறுவர்களால் உடல், உள மற்றும் பாலியல் ரீதியாகவும் துஷ்பிரயோகத்திற்கு உள்ளா கின்ற வாய்ப்புக்கள் காணப்படு கின்றன. இதனால் சில சிறுவர் இல்லங்கள் நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் மூடப்பட்டிருப்பதனையும் அறியமுடிந்தது. சில சிறுவர்கள் தாம் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகிறோமா என்பது கூடத் தெரியாத நிலையில் காணப்படுவதோடு சில சந்தர்ப்பத்தில் அத் துஷ்பிரயோகங்கள் வெளிக்காட்டப் படாமலே காணப்படுகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன.

சில சிறுவர்கள் பராமரிப்பு இல்லங் களுக்குள் உள்நுழைவதற்கான அனுமதியைப் பெறும் போதே சமயம் சார் பாரபட்சம் காட்டப்படுவது நோக்கத்தக்கது. அதுமட்டு மல்லாது அவ்வாறு உள்நுழைந்தாலும் சில சிறுவர் பராமரிப்பு இல்லங்கள், குறித்த சமயம் சார் கட்டுமானத்தில் ஆரம்பிக்கப் பட்டதாலும் அங்கு பணி புரிபவர்கள் அச்சமயம் சார் ஆசாரர்களாகவும் காணப் படுவதால் அங்கு வாழும் ஏனைய சமயத்திலான சிறுபான்மையான சிறுவர்கள் விரும்பியோ விரும்பாமலோ ஏனைய சமயத் தை நோக்கி நகர்த்தப் படுவது அவதானிக்கக் கூடியதே.

அது போன்றே சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் உதாரணமாக இந்து ஆசாரம் கொண்டவைகள் மாமிச உணவுகளைத் தவிர்க்கிறது எனலாம். இந்த வகையில் இவ் உணவுகளை உண்பதற்கான வாய்ப்புக்கள் இச் சிறுவர் பராமரிப்பு இல்லச் சிறுவர்கள் பெற்றுக் கொள்ள முடியாது போகிறது.

**11. முடிவுரையும் பரிந்துரைகளும்**

நிர்வாக முகாமைக் கட்டமைப்பில் உளவளத் துணைக்கான பகுதி நியமிக்கப் படவில்லை எனவே கட்டமைப்பில் இன்னொரு பகுதியாக உளவளத்துணைப் பகுதியைச் சேர்த்துக் கொள்ளுதல் பொருத்தமானதாக இருக்கும்.

ஏனெனில் சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் வாழும் சிறுர்களுக்கு எவ்வளவு பௌதீக ரீதியாக வசதிவாய்ப் புக்களைச் சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் வழங்கியிருந்த போதும் நாம் அச்சிறுவர் களுடன் கலந்துரையாடிய போது அச்சிறுவர் கள் எமது வேண்டுகோளின் பேரில் சில பாடல்களைப் பாடிக்காட்டினார்கள். அப்போது இனந்தெரியாததோர் ஏக்கம் அவர்களது மனதில் மலர்ந்திருந்ததைக் கண்டு கொள்ளக் கூடியதாக இருந்தது. அப் பாடல்களில் தாயைப் போற்றியும் நினைந்தும் வியந்தும் பாடியமை இவ்வாறான முடிவிற்கு எம்மை வரச்செய்தது. எனவே பெரும் பாலானோர் பெற்றோரின் அரவணைப்புக்காக ஏங்குபவர் களாகவும் பல்வேறுபட்ட சவால்களை இச் சிறுவயதிலேயே அனுபவித்தவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வாறான பல விடயங்கள் அச்சிறார்களின் மனதினைப் பாதிப்பது மட்டுமல்லாது அது அவர்களது எதிர்கால வாழ்விற்கும் இடையூறாக அமையலாம். இந்தவகையில் பௌதீக ரீதியான கட்டுமாணங்களை சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் மிகவும் நேர்த்தியான முறையில் கவனம் எடுப்பது போல உளவியல் ரீதியான செயற்பாட்டிலும் அக்கறை காட்டுவதும் இன்றியமையாதது. இந்த வகையில் பினன் வரும் பரிந்துரைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

❖ எனவே சிறுவர்களது எண்ணிக் கைக்கு ஏற்ப சிறந்த உளவளத் துணையாளர்களையும் அதனை மேற்கொள்வதற்கான இடவசதிகளையும் எந்த நேரத்திலேயும் சிறுவர்கள் உள வளத்துணையாளர்களைச் சந்திப் பதற்கான வசதி வாய்ப்புக்களையும் பெறத்தக்க வகையில் நிரந்தரமான ஓர் வசதி கட்டாயம் சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் நிர்வாகக் கட்டமைப்புக் களுள் உள்வாங் கப்படல் வேண்டும்.

❖ சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் இறை வழிபாடுகளுக்கும் நேரம் ஒதுக்குவதைப் போல உளவளத்தினைப் பேணவும் அமைதியைப் பெறவும் 'யோகா' போன்ற பயிற்சிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை வாரத்தில் குறைந்தது 2 நாட்களாவது வழங்க வேண்டும்.

❖ சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் கலை, கலாச்சார, பண்பாட்டு நிகழ்வு களுக்கான களத்தினை அமைத்துக் கொடுப்பதானது வருடத்தில் ஒருமுறை அதாவது அந்நிகழ்வு ஒரு வாரத்துக்கு தொடர்ச்சியாக நிகழக் கூடிய வகையில் அமைவதோடு அதற்கான பரிசில்கள், ஊக்குவிப்புக்கள் என்பனவும் வழங்கப் படல் வேண்டும்.

❖ வெளியக விளையாட்டுக்களைப் போல உள்ளக விளையாட்டுக்களில் அனைத்துச் சிறுவர்களும் ஈடுபடத்தக்க வகையில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

❖ காதல் சார்ந்த பிரச்சினைகள் எழுவது என்பது உளவியலின் பிரகாரம் ஓர் மனிதனின் இயல்பான பாலியல் ஊக்கமே என்பதனைப் புரிந்து கொண்டு அதற்காக கடும் போக்கான தண்டனை களைச் சிறுவர்களுக்கு வழங்காது உளவளத்துணையாளர்கள் மூலம் பொருத்தமான ஆற்றுப்படுத்தல்களை வழங்கவேண்டும்.

❖ மனரீதியான அழுத்தங்களில்

இருந்து விடுபடும் வகையில் சுற்றுலாக் கள் செல்லும் வாய்ப்புக்களை வருடத் தில் ஒரு முறையாவது ஒழுங்கு செய்ய வேண்டும்.

❖ மாதத்தில் ஒரு தடவையாவது பிள்ளைகளைச் சமூகத்துடன் ஒன்றி ணைக்கும் செயற்ப்பாட்டிற்குச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும்.

❖ சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான கருத்தரங்குகள், விழிப்புணர் வுகளை இல்லச் சிறுவர்களுக்கு வழங்குதல்.

❖ 15 வயதுக்கு மேற்பட்ட மாணவர் களுக்கு கல்வி வசதியுடன் தொழிலுக் கான வழிகாட்டியையும், பயிற்சியையும் சம நேரத்தில் வழங்குவதற்கான வசதி வாய்ப்புக்களை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

❖ 18 வயது நிறைவடைந்தவுடன் அவர்களை ஏனைய தொழில் நிறுவனங் களுடன் இணைத்தல், அவர்களுக்கான சுய தொழில் அல்லது வருமானத்தை ஈட்டக்கூடிய வகையில் வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

**உசாத்துணைகள் :**


பத்மசிறி ஜயசிங்ஹ, (1999) தற்கால இலங்கை சமுதாயமும் சிறுவர் உரிமைகளும் காண்டம் - 04, ஆசியாவில் அபிவிருத்திக்கான ஆய்வு மற்றும் கல்விப்பணிகள் தொடர்பான முன்னோடி அமைப்பு.

Nirekha De silva & Asith.G (2011), *Push and Pull factors of Institutionaliza-tion A study in the Eastern Province of Sri Lanka*, Save The Children.

Thatparan.J(2014) “ Improving National care standards in south Asia” in *Institutionalized Children Explora tions and Beyond*, Focused on the south Asian Region.

சேராவிமலதர்ம (2007) போரின் தாக்கத் துடன் வளர்ச்சி - இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் ஆயுத மோதல்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அனுபவங்கள் இலங் கை தேசிய நூலகம்.

கரோல் பெல்லமி (2004) அச்சுறுத் தலுக்குள்ளாகும் பிள்ளைப்பருவம் அமெரிக்கக் குடியரசின் சட்டசபை யின் புத்தக சாலை “விக்கினேஸ் வரன்.கு. & குணரத்தினம்.வே (2007), மனித உரிமைகள்- கோட்பாடு களும் வியாபகங்களும், கிழக்குப் பல் கலைக்கழகம், வந்தாறுமூலை, இலங்கை.